# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • நவம்பர் 6, 2021

Weekly E-paper • November 6, 2021




## தமிழ்நாடு முதலமைச்சரும் தீபாவளி வாழ்த்தும்

சுப.வீரபாண்டியன்

### இந்தித் திணிப்பை அனுமதிக்கலாமா இனமான அரசு?

வெற்றிச்செல்வன்

### 2021 அக்டோபர் இடைத் தேர்தல் முடிவுகள்

சாரதாதேவி

### ஜெய்பீம்

மணா

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● நவம்பர் 6, 2021 Weekly E-paper ● November 6, 2021


# தமிழ்நாடு முதலமைச்சரும் தீபாவளி வாழ்த்தும்

**சுப.வீரபாண்டியன்**

தீபாவளியைக் கொண்டாடுகிறோமோ இல்லையோ அதனை ஒரு கேளிக்கைக்கான நாள் என்று எடுத்துக்கொண்டு, குடும்பத்தினருடன் நண்பர்களுடன் மகிழ்வாக இருக்க வில்லை. குறைந்தது, அதனை ஒரு விடுமுறை நாளாகக் கருதி ஓய்வெடுக்கவும் இல்லை. தமிழ்நாடு முதலமைச்சர், அன்று காலையிலிருந்து பழங்குடி மக்களை, இருளர்களை, நரிக்குறவர் சமூகத்தைச் சார்ந்தவர்களைச் சென்று பார்ப்பதற்குச் செலவிட்டார்.

எத்தனையோ ஆண்டுகளாகத் தங்கள் நிலத்துக்கானப் பட்டா இல்லாமல், குடும்ப அட்டை இல்லாமல், சுருக்கமாகச் சொன்னால் முகவரியே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மக்களுக்கு ஒரு புதிய ஒளியை வாழ்வில் அவர் அன்று ஏற்றி வைத்தார்.

அந்த ஏழை மக்கள் அத்தனை பேரிடமும் அப்படி ஒரு மகிழ்ச்சி. ஒரு முதலமைச்சரை இத்தனை அருகில், இவ்வளவு நெருக்கமாய்ப் பார்க்க முடியும் என்று அவர்கள் கருதி இருக்கமாட்டார்கள். கை பிடித்துக் குலுக்கி, தோளில் சாய்ந்து படம் எடுத்து, தன் சொந்த உறவைப் பார்ப்பது போல அந்த மக்கள் மகிழ்ந்தார்கள். சந்து பொந்துகளில் நடந்து சின்னஞ் சிறு குடிசைக்குள் நுழைந்து அந்த மாமனிதன் மக்களோடு மக்களாய்க் கலந்து நின்றார். இத்தனை நிகழ்வுகளும் கடந்த தீபாவளி நாளில்தான் நடந்தன.

ஆனால், இவற்றையெல்லாம் பாராட்ட மனம் இல்லாதவர்கள், பேசாமலாவது இருக்கலாம். ஆனால் திரும்பத் திரும்ப ஒரு கேள்வியை அவர்கள் முன் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் தீபாவளிக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டாமா என்பதுதான் அந்தக் கேள்வி. எடப்பாடி அவர்கள் முதலமைச்சராக இருக்கிற போது ஒவ்வொரு முறையும் வாழ்த்துச் சொன்னார், ஏன் ஸ்டாலின் வாழ்த்துச் சொல்ல வில்லை என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இவர்களுக்கு வாழ்த்துச் சொல்லும் முதல்வர்தான் தேவைப்படுகிறார். மக்களை வாழவைக்கும் முதல்வர் தேவை இல்லை. இத்தனைக்கும் பிறகு ஏன் அவர் வாழ்த்துச் சொல்லவில்லை என்று ஒரே ஒரு கேள்வியை முன்வைக்கிறவர்களுக்கு நாம் விடை சொல்ல வேண்டியிருக்கிறது.

அவர்கள் ஒருவாதத்தை முன்வைக்கிறார்கள். தி.மு.க தலைவராகவோ, தி.க தலைவராகவோ அவர் வாழ்த்துச் சொல்ல வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் எல்லோருக்கும் நான் முதல்வர் என்று சொல்லும் அவர் ஏன் இந்துக்களின் விழாவுக்கு மட்டும் வாழ்த்து சொல்ல வில்லை என்று கேட்கிறார்கள். இஸ்லாமியர்களின் விழாக்களுக்கு, கிறிஸ்தவர்களின் விழாக்களுக்கு, வாழ்த்துச் சொல்லும் போது இந்துக்களின் விழாக்களுக்கு மட்டுமே ஏன் வாழ்த்துச் சொல்வது இல்லை என்றும் கேட்கிறார்கள். இரண்டு கேள்விகளும் மேலோட்டமாகப் பார்க்கும்போது நியாயம் போலத்தான் தோன்றுகிறது. ஆனால் அதற்குள் இருக்கும் நுண் அரசியலை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தி.மு கழகமும், முதலமைச்சரும், இன்றைய தமிழ்நாடு அரசும் இந்துக்களுக்கு எதிரானவர்கள் என்பதை நிலை நிறுத்தி இந்துக்களின் வாக்குகள் அவர்களுக்குச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இவர்களின் நோக்கம். ஆனால் கடந்த 50, 60 ஆண்டுகளாக இந்தப் பரப்புரையை அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டு இருந்தும், இந்த நிமிடம் வரையில் அதில் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. ஏனெனில் மக்கள் தங்களுக்கு நன்மை செய்கிற அரசு எது என்றுதான் தேடுகிறார்கள். தங்கள் மத விழாவுக்கு வாழ்த்துச் சொன்னால் போதும் என்று நினைத்து மக்கள் இருந்து விடுவதில்லை.



இப்போது நாம் அவர்களின் கேள்விகளுக்கு உரிய விடைகளைப் பார்க்கலாம். இந்துமத விழாக்களுக்கும் மற்ற மதங்களின் விழாக்களுக்கும் இடையில் ஒரு பெரும் வேறுபாடு இருக்கிறது. நீங்கள் தீபாவளி மட்டுமல்ல, ஆயுத பூஜை, சூரசம்காரம் என்று எந்த விழாவை எடுத்துக் கொண்டாலும், அந்த விழாவில் யாராவது ஒருவர் அல்லது சிலர் கொல்லப்பட்டிருப்பார்கள். தேவ அசுர யுத்தம் என்று அது சொல்லப்படும். ஒரு கேள்வி நம்மிடமமும் இருக்கிறது. கொன்றவரும் வென்றவரும் இந்துக் கடவுள் என்றால், கொல்லப்பட்ட வரும் வெல்லப்பட்ட வரும் யார்? கொல்லப்பட்டவர்கள் எல்லோரும் கிறிஸ்தவர்களா? இஸ்லாமியர்களா?. அவர்களும் இந்துக்கள் தானே.

அப்படியானால் ஒரு இந்துவின் வெற்றியை மட்டுமின்றி, இன்னொரு இந்துவின் மரணத்தையும் சேர்த்துக் கொண்டாடுவது எப்படிச் சரியாகும்? இப்போது நமக்குப் புரிகிறது. எல்லோரும் இந்துக்கள் என்று தங்களைக் கருதிக் கொண்டிருக்கும் மக்களுக்கு புரிய வேண்டும். இவர்களிடம் இரண்டு இந்துக்கள் இருக்கிறார்கள். ஊசிமணி, பாசி மாலை போட்டுக் கொள்ளும் இந்துக்களுக்கு முதலமைச்சர் நன்மை செய்தார். ஆனால் பூணூல் போட்டுக் கொள்ளும் மனிதர்களை மட்டும்தான் இவர்கள் இந்துக்கள் என்று கருதுகிறார்கள். ஒவ்வொரு கதைக்குப் பின்னாலும் கொல்லப்படுகிறவர்களாகவும், வெல்லப்படுகிறவர்களாகவும் சூத்திரர்களும் பஞ்சமர்களும்தான் இருக்கிறார்கள். எனவே இந்த தேவ அசுர யுத்தம் என்பது பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதோருக்கு இடையிலான யுத்தம்தானே! எனவே பார்ப்பனரல்லாதார் கொல்லப்பட்டப் பிறகு அதனை அவர்களும் கொண்டாட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதற்கு நாமும் வாழ்த்துச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

சரி விநாயகர் சதுர்த்தி, ராமநவமி, கோகுலாஷ்டமி போன்றவைகளில் யுத்தம் எதுவும் இல்லையே அது பிறந்தநாள் வாழ்த்து தானே? நீங்கள் நபிகள் பிறந்த நாளுக்கும், இயேசுநாதர் பிறந்த நாளுக்கும் வாழ்த்துச் சொல்லும் போது ஏன் விநாயகர் பிறந்த நாளுக்கும் ராமர் பிறந்த நாளுக்கும் வாழ்த்துச் சொல்லக் கூடாது என்று இன்னொரு கேள்வி? சரிதான். ஆனால் இதிலும் ஒரு வேறுபாடு இருக்கிறது. நபிகளும், இயேசுவும் கடவுள் என்று அவர்கள் சொல்லவே இல்லை. கடவுளின் தூதர்கள் என்கிறார்கள். எனவே ஒரு தலைவரின் பிறந்தநாளைக் கொண்டாடுவது போன்றதுதான் அது. அவர்கள் மனிதர்களாக வாழ்ந்தவர்கள். ஆனால் இந்து மதத்தில் சொல்லப்படும் எல்லோரும் கடவுளர்கள் அல்லது கடவுளின் அவதாரங்கள், இந்து

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# இந்தித் திணிப்பை அனுமதிக்கலாமா இனமான அரசு?


**வெற்றிச்செல்வன்**

அண்மையில் ஒன்றிய அரசின் உள்துறைச் செயலாளர், அனைத்து மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பிய ஒரு கடிதத்தில் (D.O. No. 22003/15/2019-14C, dated. 20.09.2021) இணையக் குற்றங்களைத் தடுக்கும் வகையில் அரசுத் துறைகள் செயல்படுவது குறித்த அறிவுரைகள் வழங்கப் பட்டிருந்தன.

அக்கடிதத்தில், இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு மாதமும் “சைபர் ஜாக்ரூக்தா திவாஸ்” (Cyber Jaagrookta Diwas) என்று ஒரு நாளை பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்டவற்றில் அனுசரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதாவது இணைய விழிப்புணர்வு நாள் என்பது அதன் பொருள். இக்கடிதம் ஆங்கிலத்தில் மட்டுமன்றி, இந்தியிலும் அனுப்பப்பட்டுள்ளது, ஒன்றிய அரசின் இந்தியை வளர்க்கும் கடமை உணர்ச்சியைக் காட்டுகிறது. என்றாலும் இப்போது பிரச்சினை அதுவன்று.

மேற்காணும் கடிதத்தைக் குறிப்பிட்டு, தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை, அனைத்து அரசுச் செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் (Letter No. 1511066/IT(E2)/2021-5, dated. 04.10.2021), இணைய விழிப்புணர்வு குறித்து மேற்குறிப்பிட்டச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இந்தச் செய்திகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே தொடர்புறுத்தப்பட்டுள்ளன. தமிழில் அன்று.



"Independent India @75:
Self Reliance with Integrity"

Most Immediate / Personal Attention

INFORMATION TECHNOLOGY DEPARTMENT,
SECRETARIAT,
CHENNAI- 600 009.

Letter No.1511066/IT(E2)/2021-5, dated 04.10.2021

From
Tmt. Mary Vinitha, M.A.,
Additional Secretary to Government.

To
All Additional Chief Secretaries / Principal Secretaries / Secretaries to Government,
Secretariat, Chennai – 600 009. (w.e.)

Sir,

Sub: Cyber Security - Observance of "Cyber Jaagrookta Diwas" on 6th October 2021 and first Wednesday of every month –Requested -Regarding.

Ref: 1. From the Home Secretary, Govt. of India Letter Ref. No. D.O.No.22003/15/2019-I4C, dated 20.09.2021.
2. Government Letter No.1511066/IT(E2)/2021, dated 29.09.2021 addressed to the Co-ordinator, Indian Cyber Crime Co-ordination Centre (I4C), Ministry of Home Affairs, GoI.

*******

I am directed to invite your attention to the references cited and to inform that, the Home Secretary, Government of India, vide reference 1st cited has informed that the Ministry of Home Affairs, Government of India is implementing a scheme called the 'Indian Cyber Crime Co-ordination Centre (I4C)' to deal with cybercrimes in a coordinated and comprehensive manner. As there is a pressing need to increase 'cyber hygiene' for prevention of cybercrimes by inculcating habits of taking basic care of ICT devices at regular intervals, I4C has requested the Government to observe **'Cyber Jaagrookta Diwas'** on first Wednesday of every month online initially in view of COVID precautions, commencing from 6th October, 2021 in all Schools/Colleges/Universities/ Panchayat Raj Institutions (PRI) and Municipalities by involving District Magistrates, Police authorities, Officers of Education Department, PRIs etc. This initiative will also help in creating awareness amongst students of Schools and Colleges by organizing workshops, seminars, interactive sessions, creative sessions like poster making/slogan writing/short stories, etc. The list of suggestive topics along with the Write Up on 'Cyber Jaagrookta Diwas' is attached herewith (copy enclosed).

அதுமட்டுமின்றி, சைபர் ஜாக்ரூக்தா திவாஸ் என்றே ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டு, அன்றைய நாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்தி வார்த்தைகளின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கூட இல்லை. (பார்க்க படம்).

தமிழ்நாட்டில் இயங்கும் ஓர் அரசுத் துறை, தமிழ்நாட்டு அரசின் பிற துறைகளைத் தொடர்பு கொள்ள, ஏன் தமிழைப் பயன்படுத்தவில்லை என்பதே நமது கேள்வி. இது வெறும் மொழி சார்ந்த உணர்வினால் மட்டுமே எழுப்பப்படும் கேள்வியன்று. இவ்விடத்தில் விதிமுறைகளும் பின்பற்றப்படவில்லை என்பதுதான் கவனிக்கத்தக்கது.

1956-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத்தின்படி, தமிழ்நாட்டின் ஆட்சிமொழி, தமிழ் மட்டுமே. தமிழ்நாடு அரசு இதுவரை வெளியிட்டுள்ள அரசாணைகளின்படி, அரசு அலுவலகங்களில் பேணப்படும் பதிவேடுகள், கோப்புகள் அனைத்தும் தமிழிலேயே அமைதல் வேண்டும்.

மேலும் கடிதங்கள், ஆணைகள், காலமுறை அறிக்கைகள், பயணநிரல்கள், நாட்குறிப்புகள், பெயர்ப்பலகைகள், முத்திரைகள் முதலியன அனைத்தும் தமிழிலேயே அமைதல் வேண்டும் என்றும், அரசு அலுவலர்கள் / பணியாளர்கள் தமிழிலேயே ஒப்பமிடுதல் வேண்டும் என்றும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது வெளியிடப் பட்ட அரசாணையில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது (அரசாணை (நிலை) எண். 41, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை (தவ1-1), நாள் 20.02.2008).

இந்நிலையில், ஒன்றிய அரசின் கடிதத்தினை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்காமலும், அதில் குறிப்பிடப் பட்டுள்ள இந்தி வார்த்தைகளை அப்படியே தொடர்புறுத்தியிருப்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அன்று. தமிழை ஆட்சிமொழியாக அறிவித்து, 60 ஆண்டுகள் கடந்த நிலையில், தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளையும் ஒன்றிய அரசின் ஆட்சிமொழிகளாக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வரும் இந்நாட்களில், தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலேயே இவ்வாறான விதிமுறை மீறல்கள் நடைபெறுவதைத் தொடக்கத்திலேயே தடுப்பது அரசின் தலையாயக் கடமையாகும்.

இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் நடைபெறா வண்ணம், அரசுச் செயலாளர்களுக்கு அறிவுறுத்துவதோடு, தேவை ஏற்படின் தமிழின் பயன்பாட்டினை மேலும் செழுமைப்படுத்தும் வகையில், தற்போதையச் சூழலுக்கேற்றப் புதிய விதிமுறைகளையும், ஆணைகளையும் பிறப்பிப்பதும் தேவையானச் செயல்பாடுகள்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து தனது சிறப்பானச் செயல்பாடுகளால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கும் தமிழக அரசு, ஆட்சித்தமிழ் தொடர்பான நடவடிக்கைகளிலும் சீரிய முறையில் செயல்பட வேண்டும் என்பதே நமது கோரிக்கையாகும். ●

முன்பக்கத் தொடர்ச்சி...

மதம் என்பது சனாதன மதம், இதற்கு அந்தமும் இல்லை ஆதியும் இல்லை என்கிறார்கள். மதத்திற்கே ஆதி அந்தம் இல்லை என்றால், மதத்தைப் படைத்தக் கடவுளுக்கு எப்படி ஆதியும் அந்தமும் இருக்க முடியும்? பிறப்பும் இறப்பும் உடையவராக இருந்தால் அவர் எப்படிக் கடவுளாக ஆக முடியும்? நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கிருஷ்ணர் கொலை செய்யப்பட்டார். ராமர் நதியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். இதுதான் அவர்கள் தருகிற புராணக்கதை. தற்கொலை செய்துகொள்வது எப்படிக் கடவுளின் மனோபாவம் ஆகும் என்று கேட்டால், உடனே நீங்கள் எல்லோரும் இந்துமத விரோதிகள் என்கிறார்கள்.

ஆகவே பிறப்பும், இறப்பும் அற்றவர் கடவுள் என்று சொல்லிவிட்டு, கடவுளின் பிறந்தநாளைக் கொண்டாடுங்கள் என்று சொல்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல் அப்படி அவதாரம் எடுத்து வந்த ராமர் என்ன செய்தார், தவம் செய்த சம்புகன் எனும் சூத்திரனைத் தலையை வெட்டிக் கொன்றார். எதற்காகச் சம்புகன் கொல்லப்பட்டார்? அவன் இந்து மதத்திற்கு எதிராக ஏதேனும் பேசினானா? இந்து மதக் கடவுள்களை நிந்தனை செய்தானா? இல்லை. இந்து மதம் சொல்லுகிற தவம் என்னும் முறையைத்தானே அவன் மேற்கொண்டான். பிறகு ஏன் அவரை இராமர் கொன்றார்?

சூத்திரன் எப்படித் தவம் செய்யலாம் என்று கேட்டு இராமர் அவன் கழுத்தைச் சீவினார். எனவே இங்கே மதம் என்கிற பெயரில் வருணம்தான் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்னும் சிக்கல்தான் மேலெழுந்து நிற்கிறது. எனவே பார்ப்பனர்களின் கொண்டாட்டங்களை அவர்கள் கொண்டாடிக் கொள்ளட்டும். பார்ப்பனரல்லாதார்கள் கொண்டாடவேண்டும் என்று எதிர்பார்ப்பதும், பார்ப்பனரல்லாதார்களின் அரசு வாழ்த்துச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் எந்த வகையிலும் நியாயமாகாது.

மீண்டும் மீண்டும் சொல்கிறேன் மக்களுக்காக இந்த அரசு இயங்குகிறது. அந்த மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் இந்துக்களாகத்தான் இருக்கிறார்கள். இந்துக்களுக்கு நன்மை செய்கிற அரசைப் போற்றுவதுதான் நேர்மையானச் செயலாக இருக்க முடியும். அப்படி இல்லாமல் இந்துக்களைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. இந்து மதம் பற்றியும், இந்துக் கடவுள் பற்றியும், அவற்றை எல்லாம் காப்பாற்றிக் கொண்டு இருப்பதாகச் சொல்லப்படும் பார்ப்பனர்களைப் பற்றியும்தான் நாங்கள் கவலைப்படுவோம். பார்ப்பனர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவதும், அவர்களை வணங்கி நிற்பதும், அவர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதும் நான் இந்து மத அடிப்படை என்று சொன்னால், நாங்கள் சாகும்வரை இந்துமத விரோதிகள் ஆகத்தான் இருப்போம். ●

# 2021 அக்டோபர் இடைத் தேர்தல் முடிவுகள்

● சாரதாதேவி

இந்திய ஒன்றியத்தின் 13 மாநிலங்களில் பணி விலகல், இறப்பு, கட்சித் தாவல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வெற்றிடமாக்கப்பட்ட 29 சட்டப்பேரவை உறுப்பினர் பதவிகளுக்கும், 3 நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கும் கடந்த அக்டோபர் மாதம் 30ஆம் நாள் இடைத் தேர்தல் நடைபெற்றது.

அடுத்த சில மாதங்களில் நடைபெறவிருக்கும் உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களுக்கான முன்னோட்டமாகப் பார்க்கப்படுவதால் இந்த இடைத் தேர்தல் மிகுந்த கவனத்தைப் பெறுகிறது.

தலைநகர் டெல்லியில் கடந்த ஓராண்டு காலமாக நடைபெற்று வரும் விவசாயிகளின் போராட்டம், தொடர்ந்து ஏறி வரும் பெட்ரோல், டீசல், வீட்டு மற்றும் வணிக எரிவாயு விலைகள், தலித் மற்றும் சிறுபான்மை மக்கள் மீதானத் தாக்குதல்கள் ஆகியவற்றுக்காக ஆளும் மிருகத்தனமான இந்துத்துவ அரசிற்குப் பாடம் கற்பிக்கும் வகையில் முடிவுகள் இருக்குமா, 2024 ஆட்சி மாற்றத்திற்கான சிறு ஒளிக் கீற்றாகவாவது தென்படுமா, அல்லது இன்னும் சிரமமானப் போராட்டக் களத்திற்கு மக்களைத் தயார்ப் படுத்த வேண்டி உள்ளதா எனும் கவலையாலும், இந்தத் தேர்தல் அனைத்துச் சனநாயக ஆற்றல்களாலும் கூர்மையாகக் கவனிக்கப்படுகிறது.

இம்மாதம் 2ஆம் நாள் அறிவிக்கப்பட்டத் தேர்தல் முடிவுகள் சற்று நம்பிக்கையைத் தருவதாகவே உள்ளன. 3 நாடாளுமன்ற இடங்களில் 2-ஐ பா.ஜ.க விடமிருந்து காங்கிரசும், சிவசேனாக் கட்சியும் கைப்பற்றி உள்ளன. சட்டப் பேரவைக்கான இடங்களில் 19 இடங்களை பா.ஜ.க அல்லாத இந்திரா காங்கிரசு, திரிணாமூல் காங்கிரசு, ஐக்கிய ஜனதா தளம், சிவசேனா, ஒய்.எஸ்.ஆர் காங்கிரசு மற்றும் மாநிலக் கட்சிகள் (கூட்டணியாக இருந்தாலும்) கைப்பற்றியும் தக்கவைத்தும் உள்ளன.

கர்நாடகத்தில் 2 இடங்களில் ஒன்றைக் (ஹங்கல்) காங்கிரசுக் கட்சி கைப்பற்றியதைப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் பசவராஜ் பொம்மை ஆட்சியின் தோல்வியாகப் பார்த்தாலும், தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதியிலிருந்து ஊழல் குற்றச்சாட்டுகளால் விலகி பா.ஜ.கவில் சேர்ந்த எட்டலா ராஜேந்தரின் வெற்றியைக் கவலையோடு பார்க்க வேண்டி உள்ளது. பீகாரில் லாலு பிரசாத்தின் ராஷ்ட்ரீய ஜனதா தளம் 1 இடத்தைக் கைப்பற்றி உள்ளது.

மேற்கு வங்கம், ஹிமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், கர்நாடகா, ஹரியானா, பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் 12 இடங்களைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் கைப்பற்றியும், 7 இடங்களைத் தக்கவைத்தும் உள்ளன. பா.ஜ.க. பல இடங்களில் குறைவான வாக்கு வித்தியாசத்திலேயே வென்றிருக்கிறது.

அசாம், மிசோரம், மேகாலயா ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் பா.ஜ.கவும் கூட்டணிக் கட்சிகளும் முழுவதுமாக வென்றுள்ளன. திரிபுராவில் சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றுமொரு குஜராத் முன்னோட்டமோ என எண்ணும் வகையில் இருக்க, வடகிழக்கில் இந்த வெற்றிகள் நமக்குப் பேரச்சத்தைத் தருகின்றன. வெறுப்பு அரசியல் அங்கு வேர் பிடிக்கத் தொடங்கிவிட்டதன் அறிகுறிகளாகவே பா.ஜ.கவின் வெற்றியைப் பார்க்க வேண்டி உள்ளது. கல்வி, பொருளாதாரம், மற்றும் சமூக ரீதியாகப் பின் தங்கிய எல்லைப் பகுதி மக்களிடையே இந்துத்துவத்தின், வெறுப்பு அரசியலின், தாக்கம் வெகு இயல்பாகவும் விரைவாகவும் பற்றிக் கொள்ளுதல் மிகவும் ஆபத்தான முன்னெச்சரிக்கையை நமக்குக் கடத்துகின்றன.

வணிக எரிவாயு விலையை 240 ரூபாய்கள் ஏற்றிவிட்டு, தீபாவளிக்காக பெட்ரோல், டீசல் விலையைச் சற்று குறைத்ததாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளதை, வடகிழக்கு தவிர்த்து இதர மாநிலங்களில் பா.ஜ.க. வின் தோல்வி முகத்தைச் சீர் செய்யவும் அதே நேரம் வணிக எரிவாயு விலை ஏற்றத்தைத் தற்காலிகமாக மக்களை மறக்கடிக்கச் செய்யும் உத்தியாகவும் பார்க்கலாம்.

தமிழ்நாட்டில் முதல்வர் முக. ஸ்டாலினும், மக்களவை உறுப்பினர் கனிமொழியும் ஏனையத் தலைவர்களும் மக்களிடம் சென்றதைப் போல ஒன்றிய அளவில் ராகுலும், பிரியங்காவும், இதர மாநிலத் தலைவர்களும் மக்களிடையே இன்னும் கடினமாக உழைக்க வேண்டி உள்ளது. மேலும் அவர்களுடையக் கட்சியினுள்ளேயே இருக்கும்
ஆர்.எஸ்.எஸ் சார்புத் தலைவர்களை அடையாளம் கண்டு முடக்க / விலக்க வேண்டியத் தேவை உள்ளது. தி.மு.க. திரிணாமூல் காங்கிரசு, சிவசேனை, ராஷ்ட்ரீய ஜனதா தளம், இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் இந்த நாடு பாசிசச் சக்திகளிடமிருந்து மீள ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டி உள்ளதையே இந்த இடைத் தேர்தல் முடிவுகள் நமக்கு உணர்த்துகின்றன. தேர்தல் வியூக வணிகர் பிரசாந்த் கிஷோர் சொல்லும் அசைக்க முடியாத மோடி எனும் ஆரூடத்தை உடைத்து, 2024 இல் இந்துத்துவத்தைக் கட்டுப்படுத்தும் வேலைகளைச் சிரமேற்போம்! ●

---

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழ்ப் புத்தாண்டு, முதல்வருக்கு வேண்டுகோள்!

தி.மு.கழகத் தலைமையிலான தமிழ்நாடு அரசின் ஆட்சியை மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மக்களுக்கான ஆட்சியாக, ஆட்சி செய்து மக்களின் பேராதரவைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

ஆனால், அதிகார மட்டங்களினால் சில நேரங்களில் ஏற்படும் தவறுகள் முகம் சுளிக்க வைக்கிறது. 02-11-2021 தேதியிட்ட தமிழக அரசின் அரசாணை, 2022ஆம் ஆண்டுக்கான அரசு விடுமுறை நாள்களைப் பட்டியலிட்டு உள்ளது. அதில் 14-01-2022 ஆம் நாள் பொங்கல் என்றும், 14-04-2022ஆம் நாள் "தமிழ்ப் புத்தாண்டு" என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளதைப் பார்க்க வியப்பாக இருக்கிறது.

1935ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் மறைமலையடிகளார் தலைமையில் திரு.வி.கல்யானசுந்தரனார், கா.சு.பிள்ளை, சச்சிதானந்தம் பிள்ளை, நா.மு.வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், கி.ஆ.பெ.விசுவநாதம், தா.நமச்சிவாயனார், உ.வே.சாமிநாத ஐயர் போன்ற தமிழறிஞர்களால் ஆய்ந்து இறுதி செய்யப்பட்டத் தமிழ்ப் புத்தாண்டு, தை முதல் நாள் என்பதே.

இதனை ஏற்றுத் தலைவர் கலைஞர் 2008ஆம் ஆண்டு அரசாணைப் பிறப்பித்தார். ஆனால் இவ்வாணையை 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க அரசு ரத்து செய்து ஏப்ரல் 14ஆம் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாக அரசாணையின் மூலம் அறிவித்தது. அந்த ஆணைதான் இன்னும் தொடர்வதாகத் தெரிகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், நடைமுறையில் இருக்கும் அரசாணையை ரத்து செய்து, தை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிவிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# ஜெய்பீம்

மணா

போராட்ட முழக்கமாக ஒலித்தச் சொல்லை வைத்து உருவாக்கப்பட்ட இத்திரைப்படத்திலும் உண்மையின் அனலடிக்கிறது. தமிழ் மண்ணில் நினைவின் இருட்டில் மறைக்கப்பட்ட பல கொடூரங்களின் வெளிச்சம் வெளித்தெரிகிறது.

வாச்சாத்தி உள்ளிட்ட கடந்த காலச் சம்பவங்களைக் கிளற வைக்கிறது ‘ஜெய் பீம்’.

தலித் மக்களின் வலிகளைக் காட்சிப்படுத்திய சில அண்மைக் காலத்தியப் படங்களைத் தொடர்ந்து, வெகு காலமாகத் தாழ்த்தப்பட்டே வைக்கப்பட்டிருந்தப் பழங்குடி மக்களைக் குறிப்பாக இருளர் என்கிற தொல் இனத்தின் வலிகளை உண்மைக்கு நெருக்கமாகப் பேசும் படத்தின் கதைக்களம்தான் அதன் ஆதாரபலம்.

கதையின் நாயகனான சூர்யா கதாபாத்திரத்தின் பெயர் சந்துரு. உண்மையிலேயே முன்னாள் நீதியரசரான சந்துரு வழக்கறிஞராக இருந்தபோது கையில் எடுத்து வாதாடி நீதியை நிலைநாட்டிய வழக்குதான் சில மாற்றங்களுடன் திரைப்படமாகி இருக்கிறது என்பதால் உண்மையின் வீரியம் படம் நெடுகிலும்.

ராசாக்கண்ணு பாம்பு, எலி பிடிப்பதில் தேர்ச்சி பெற்ற இருளர் இனத்து இளைஞன். கர்ப்பமான மனைவி, ஒரு மகள். ஊர் நாட்டாமை வீட்டில் பாம்பு புகுந்துவிட, ராசாக்கண்ணு போய்ப் பாம்பைப் பிடித்து வருகிறான். அதில் ஆரம்பிக்கிறது வினை.

அவன் பிழைக்க வெளியூர்ச் செங்கல் சூளைக்குச் சென்றிருக்கும் போது நாட்டாமை வீட்டில் நகை திருடு போகிறது. திருட்டுப் புகார் ராசாக்கண்ணு மீது விழுகிறது.

அவனுடைய கர்ப்பமான மனைவியை முரட்டுத் தனத்துடன் காவல்நிலையத்துக்கு இழுத்துப் போய்ச் சித்திரவதைப்படுத்துகிறது. ராசாக்கண்ணுவின் உறவினரான இரண்டு இளைஞர்கள் காவல் நிலையத்தில் அனுபவிக்கும் சித்திரவதைகள் கொடூரம். அதிலும் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பார்ப்பவர்களைக் கலங்கடிக்கும்.

ராசாக்கண்ணுவும் காவல்துறையிடம் மாட்ட அவருக்கு உச்சக்கட்டச் சித்திரவதை நடக்கிறது. தங்கள் மீது சுமத்தப்பட்ட புகார்களை மறுத்தும் காவலர்கள் சாத்தான் குளம் பாணியில் எல்லா அராஜகங்களையும் விசாரணை என்கிற பெயரில் அரங்கேற்றுகிறார்கள். சட்டென்று காவல் நிலையத்தில் இருந்த ராசாக்கண்ணுவும், உடனிருந்த இரண்டு பேரும் காணாமல் போகிறார்கள்.

ராசாக்கண்ணுவின் மனைவி (லிஜோமோல் ஜோஸ்) வழக்கறிஞர் சந்துரு(சூர்யா)வை அணுக, அவர் வழக்கை எடுத்துக்கொண்டு ஆட்கொணர்வு மனுவைப் போடுகிறார். காவல்துறை செயற்கையாகப் புனைந்திருக்கிற முடிச்சுகள் ஒவ்வொன்றாக அவிழ்கின்றன.

ஜோடனைகள் எல்லாம் கலைந்து காவலர்களின் அசலான வன்மம் எப்படிப் பட்டவர்த்தனமாக வெளிப்படுகிறது என்பது தான் படத்தின் மையம்.

வழக்கமான காதல், பாடல்கள், சண்டைகள் என்று எதுவும் இல்லாமல் தாடி விரவிய முகம், அக்னியானப் பார்வை, கொதிக்கும் வசனங்களுடன் சூர்யாவின் திரை வாழ்வில் இது முக்கியமானப் படம். எத்தனை சரிவுகள் வந்தாலும், அலைக்கழிப்புக்கு ஆளானாலும், காவல்துறை என்ற இயந்திரத்தின் அசுர நெருக்கடிக்கு ஆளானாலும்,உண்மையை வெளிக்கொண்டு வர நம்பிக்கையுடன் சூர்யா மேற்கொள்ளும் யதார்த்தமும், மனிதாபிமானமுமான நடவடிக்கைகள் படத்திற்கு உயிர் கொடுத்திருக்கின்றன.

படத்தின் ஜீவனான இன்னொரு கதாபாத்திரம் இருளரான ராசாக்கண்ணுவாக நடித்திருக்கும் மணிகண்டன். எலியை வயலில் புகைபோட்டுப் பிடிப்பதில் துவங்கி பாம்பைப் பிடிப்பதுடன், திருட்டுக் குற்றச்சாட்டுக்கு ஆளாகி காவல்நிலையத்தில் சித்திரவதைக்கு ஆளாகிறக் காட்சி வரையிலும் நடிப்பில் காட்டியிருக்கும் யதார்த்தம் படத்தை உண்மைக்கு நெருக்கமாகக் கொண்டு செல்கிறது. கபாலிக்குப் பிறகு பாராட்டத்தக்க வளர்ச்சி.

ராசாக்கண்ணுவின் மனைவியாக நடித்திருக்கும் நடிகை லிஜோமோல் ஜோஸ் கர்ப்பமான வயிற்றுடன் எந்தப் பேரத்திற்கும் அடிபணியாமல் கணவருக்காக நீதி கேட்டுப் போராடும் பாத்திரத்திற்கு முடிந்தவரை தன் நடிப்பின் மூலம் நியாயம் சேர்த்திருக்கிறார். ‘ஜோக்கர்’ படத்தின் மையத்துடன் இசையால் இணைந்திருந்ததைப் போல, படம் முழுக்க உக்கிரமான இசையால் நிரம்பியிருக்கிறார் ஷான் ரோல்டன்.

துல்லியமான உச்சரிப்புடன் கூடிய யுகபாரதியின் பாடல் வரிகளும், படத்தின் சித்திரவதைகளையும், சில கணங்களின் அழுத்தம் பெறும் பின்னணி இசையும் பார்வையாளர்களின் மனதில் அதிர்வை ஏற்படுத்தியிருக்கின்றன.

படத்திற்குத் துடிப்பேற்றியிருக்கும் இன்னொரு அம்சம் வசனங்கள். மிகையற்ற, இயல்பான கம்பீரம் கொண்ட வசனங்கள். நீதிமன்றக் காட்சிகள் சற்றே நீண்டிருந்தாலும், அதில் ஆவணப்படச்சாயல் வந்துவிடாதபடி இருக்கின்றன நீதி குறித்தும், காவல்துறை குறித்துமான வசனங்கள். பொருத்தமான நடிகர், நடிகைகள் தேர்வும் கச்சிதம்.

காவல்துறை அதிகாரியாக வரும் பிரகாஷ் ராஜ், காவலர்களாக நடித்திருப்பவர்கள்,ராசாக்கண்ணுவின் மகளாக நடித்திருக்கும் அந்தச் சிறுமி, இருளர்களாக நடிப்பவர்கள் என்று பலரும் நடிப்பில் நிறைவைத் தந்திருக்கிறார்கள். இருளர் வாழ்விடம் துவங்கி நீதிமன்றம், காவல்நிலையக் கொட்டடி என்று ஒளிப்பதிவு சிறப்பு.





நீதியரசர் சந்துரு

சிறையில் இருந்து வெளியேறும் கைதிகளிடம் சாதியைக்கேட்டு, தாழ்த்தப்பட்ட பழங்குடிகளைக் கேட்க யாருமற்றக் கூட்டமாய் இனம் பிரித்துப் பொய் வழக்குப் போடும் முதல் காட்சியிலிருந்து,எவ்வளவு அடக்குமுறையையும் மீறி கனத்த சிசு அடங்கிய வயிற்றுடன் வென்று நகரில் பட்டா பெற்று அதற்குக் கணவரின் பெயரைச் சூட்டும் இறுதிக்காட்சி வரை படத்தைத் தூக்கிப் பிடித்திருப்பது நடந்த உண்மையின் வேர்.

உண்மை சுடும்தானே. அதுதான் இந்தப் படத்தின், இயக்குநர் த.செ.ஞானவேலின் பெரும் பலம்.

இறுதியில் எத்தனையோச் சிக்கலான வழக்குகளில் குரலற்றவர்களுக்கான நீதிமன்றக் குரலாய் ஜஸ்டிஸ் சந்துரு விளங்கியிருப்பதை இறுதியில் ‘டைட்டில் கார்டாக்’ காட்டுகிறார்கள்.

‘ஜெய்பீம்’ படத்தலைப்புக்கு அழுத்தமான உருவாக்கத்தின் மூலம் அதிகம் வலுச் சேர்த்திருக்கிறார் இயக்குநரான த.செ.ஞானவேல்.

காட்சி மொழியில் நீதியரசர் சந்துருவுக்கும், சமூக நீதிக்கும் கௌரவம் சேர்த்திருக்கிறது ‘ஜெய்பீம்’!

(முகநூலில் வெளிவந்த விமர்சனம், )

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian